## ஸ்ரீலங்கா கொம்பியூட்டர் எமெர்ஜென்சி றெஸ்போன்ஸ் ரீம் (தனியார்) கம்பனி-2017

ஸ்ரீலங்கா கொம்பியூட்டர் எமெர்ஜென்சி றெஸ்போன்ஸ் ரீம் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கொடுக்கல் வாங்கலின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அறிக்கைத் திகதியிலுள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள பிரிவுகளின் பிரகாரம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுகின்றது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், வரைபு ஆண்டறிக்கையானது நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான வரைபு ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

கம்பனியால் தயாரிக்கப்பட்ட 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினத்தின் விபரங்கள் பின்வருமாறுள்ளது.

| சொத்துக்கள் | தொகை |
|---|---|
| | ரூபா |
| நடைமுறையல்லாச் சொத்துக்கள் | 5,210,879 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 37,780,174 |
| **மொத்த சொத்துக்கள்** | **42,991,053** |
| **பொறுப்புக்கள்** | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 769,021 |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | 11,527,081 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **12,296,102** |
| உரிமையாண்மை | 30,694,951 |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | **42,991,053** |

| | |
|---|---|
| மொத்த வருமானம் | 35,770,926 |
| மொத்த செலவினங்கள் | 27,186,372 |
| | ---------------- |
| **ஆண்டிற்கான மிகை** | **8,584,554** |
| | ======= |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 133(1) ஆம் பிரிவு | கம்பனியின் வருடாந்த பொதுக் கூட்டமானது 2006 யூன் இல் கம்பனியினை ஸ்தாபித்ததற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.5 ஆம் பிரிவு | வருடாந்த பொருள் மெய்மையாய்வானது 2016 மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆகையால், நடைமுறையல்லாச் சொத்துக்களின் உள்ளதன்மை கணக்காய்வில் அறுதியிட முடியாதிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம், கம்பனியானது கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 ஆம் மற்றும் 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருக்கவில்லை.

#### 3.1.2 செயற்பாடு மற்றும் மீளாய்வு

மீளாய்வாண்டின் போது நான்கு செயற்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) தேசிய சான்றுறுதிப்படுத்தல் அதிகாரசபை (என்சீஏ) செயற்திட்டம்**

செயற்திட்டமானது தேசிய சந்தைப்படுத்தல் அதிகாரசபையை ஸ்தாபிப்பதற்கு முயல்வதுடன் இது சான்றிதழ் சேவை வழங்குனர்களின் (சீஎஸ்பிஎஸ்) ஒழுங்கமைப்பு உருப்படியாக செயற்படும். அனைத்து சீஎஸ்பிஎஸ்களும் குறியாக்கல் செயற்பாடுகளை பாதுகாப்பான முறையில் செயற்படுத்துவதற்கு பல்வேறுபட்ட சீஎஸ்பிகளிடமிருந்து பயன்பாட்டளர்களுக்கு இயலுமான வகையிலுள்ள என்சீஏ படிநிலை பொறுப்பு மாதிரியின் பகுதியொன்றாக இருக்கும்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கம்பனியின் செயல்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், 2016 மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றமானது முறையே 40 சதவீதம் மற்றும் 66 சதவீதமாகவிருந்தது. எனினும், தலைமைக் கம்பனியின் செயற்திட்ட முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான செயற்திட்டத்தின் பௌதீகச் செயன்முன்னேற்றம் முறையே 19 சதவீதம் மற்றும் 73 சதவீதமாகவிருந்தது. ஆகையால் செயற்திட்டத்தின் உள்ளபடியான பௌதீக செயன்முன்னேற்றத்தை கணக்காய்வில் உறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

(ii) தலைமைக் கம்பனியானது செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றத்தை தீர்மானிக்கின்ற போது, முழு நடவடிக்கைகளில் 30 சதவீத எடையானது பெறுகைச் செய்முறைக்காக கொடுக்கப்பட்டிருந்ததுடன் அந்த 5 பெறுகைகளில் 27 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எனினும், திட்டமிட்ட 5 பெறுகைகளிலும், 2 பெறுகை மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. ஆகையால், 27 சதவீத பௌதீகச் செயன்முறையானது கணக்காய்வின் போது ஐயத்திற்குரியதாகவிருந்தது.

(iii) 2016 மார்ச் 08 ஆந் திகதிய தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சிபாரிசுகளின் பிரகாரம், என்சீஏ இற்கான சில விடயங்கள் 2004 இலிருந்து 2014 வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்டது. எனினும், என்சீயானது 2015 திசெம்பர் 31 வரையிலும் செயற்பாட்டு மட்டத்திற்கு அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியானது மேலும் இரண்டு காலப்பகுதியிலும் உத்தேசித்த வெளியீட்டினை அடைந்திருக்கவில்லை என கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கையின் இணையப் பாதுகாப்பு மற்றும் டிஜிற்றல் தடவியல் உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டம்**

இலங்கை சீஈஆர்ரீக்காக பொருட்களை பெறுகை செய்வதற்காகவும் சேவைகளை வழங்குவதற்காகவும் உத்தேசித்தது. கம்பனியின் செயன்முன்றேற்ற அறிக்கையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கையின் இணையப் பாதுகாப்பு மற்றும் டிஜிற்றல் தடவியல் உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டத்தின் பௌதீகச் செயன்முன்னேற்றமானது 80 சதவீதமாகவிருந்தது. எனினும், தலைமைக் கம்பனியின் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் பௌதீக செயன்முன்னேற்றம் 19 சதவீதமாகவிருந்தது. ஆகையால், செயற்திட்டத்தின் உள்ளபடியான பௌதீக செயன்முன்னேற்றத்தை நிரூபிக்க முடியாதிருந்தது.

**(இ) இணைய மோசடி மற்றும் உயர்தர இணையப் பாதுகாப்பு நிலையம்**

செயற்திட்டத்தின் நோக்கமானது இணைய மோசடி மற்றும் இணைய பாதுகாப்பு போன்றவற்றிலுள்ள அறிவை உயர்த்துவதற்காக பயிற்சியளித்தல், ஆராய்ச்சி மற்றும் கல்வி என்பவற்றிற்காக நிலையங்களை ஸ்தாபித்தல் ஆகும். பௌதீக செயன்முன்னேற்றத்தில் 25 சதவீதமான திட்டமிடல் கட்டம் பூர்த்தியாக்கிய பின்னர் நிதியங்கள் இல்லாமையால் செயற்திட்டத்தை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**(ஈ) இணைய பாதுகாப்பு இயலுமை மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் பௌதீக மற்றும் நிதிசார் செயன்முன்னேற்றம் முறையே 52 சதவீதம் மற்றும் 27 சதவீதமாகவிருந்தது.

### 3.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உலக வங்கியானது இலத்திரனியல் இலங்கை நிகழ்ச்சித்திட்டத்தின் முதற்தர நன்கொடையாளராகவிருந்ததால் சுயாதீனத்திற்கான அவசியமான தேவைப்பாடானது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைக்கு (ஐசீரீஏ) நீடிக்கப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டது. அதற்கிணங்க, ஐசீரீஏ ஆனது 2003 யூலை 16 ஆந் திகதிய சீஎம்பி/03/0884/134/027 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தினூடாக நிதிசார் மற்றும் நிர்வாக விடயங்களின் பிரகாரம் முழு பலத்தை வழங்கியது. எனினும், ஐசீரீஏ இன் துணைக்கம்பனியாக, நடைமுறையில் கம்பனியானது முழுமையாக திரட்டு நிதியில் தங்கியிருந்த போதும் அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் நிதிசார் மற்றும் நிர்வாக ஆட்சியானது தற்போதும் செயற்பாட்டிலிருந்தது. மேலும், நிதிசார் மற்றும் நிர்வாக விடயங்களுடன் தொடர்புடைய முழு வலுவானது குறுகிய காலப்பகுதியில் உயர்தர தகுதி வாய்ந்த விசேட நபர்களுக்கு பெறுபேறுகளை வழங்கும் தேவையிருந்த போதும் உலக வங்கி நிதியீட்டத்தால் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அத்தகைய ஏற்பாடொன்று 2003 மே 27 ஆந் திகதிய அமைச்சரவைப் பத்திரத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சீஈஆர்ரீயானது ஐசீரீஏ இன் கீழ் தனிப்பட்ட கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட திட்டமிடல், கணக்குகளை தயாரித்தல், நிர்வாக மற்றும் மனிதவள முகாமைத்துவமானது உள்ளடங்கலான அனைத்து நடவடிக்கைகளும் மீளாய்வாண்டின் போது தலைமைக் கம்பனியால் கையாளப்பட்டது.

(இ) இலங்கை சீஆர்ரீ இன் ஸ்தாபிப்புடன் தொடர்புடைய 2005 மே 19 இன் சபைக்கூட்ட குறிப்புக்களின் பிரகாரம், இது தனியார் நிதியிடல் நிறுவனமாக இருக்க வேண்டும். மேலும், இலங்கை சீஆர்ரீ நடவடிக்கைகளின் நிதியடலானது ஆண்டொன்றிற்காக ஐசீரீஏ ஆல் தாங்கவேண்டுமென்பதுடன் அதன் பின்னர் அதனுடைய சொந்த வருமான மூலங்களை உருவாக்குவதில் இது சுயாதீனமாக செயற்பட வேண்டும். எனினும், கம்பனியின் ஸ்தாபிப்பிலிருந்து 12 வருடங்கள் கடந்த பின்னர், இது திரட்டு நிதியத்தினூடாக முழுமையாக நிதியிடப்படும்.

### 3.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பிரிவின் பிரகாரம், மனிதவளத் திட்டமானது மனிதவள

பாதீட்டை ஒன்றுசேர்த்து கம்பனியால் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் இது திறைசேரியின் பொது முயற்சிகள் (பீஈடீ) திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், அத்தகைய திட்டமொன்று இலங்கை சீஈஆர்ரீ ஆல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டமானது 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட தேவைப்பாடுகளை சுட்டிக்காட்டி இலங்கை சீஈஆர்ரீ ஆல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.6 ஆம் பிரிவின் பிரகாரம், செயலாற்றல் மதிப்பீடுகளானது வழமையான அடிப்படையில் மற்றும் முறையான செய்முறையை பின்பற்றுவதன் மூலம் கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகத்தின் ஊழியர்கள் மற்றும் ஆலோசனையாளர்களின் சம்பளங்களானது சந்தைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்பட்டிருந்த அதேநேரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு திட்டமில்லாமல் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தது. எனினும், சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் அமைச்சு அல்லது திறைசேரி அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், கம்பனியானது, 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட எந்தவித தேவைப்பாடுகளையும் கருத்திற்கொள்ளாமல் ஆலோசனையாளர்களுக்கு சம்பளங்கள் மற்றும் படிகளை செலுத்தியது.

(உ) செயற்திட்டங்களிற்காக ஒதுக்கப்பட்ட மூலதன ஏற்பாடுகளானது மீண்டெழும் ஏற்பாடுகளை ஒதுக்கீடு செய்யாமல் சம்பளங்கள் கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பெறுகை மற்றும் ஒப்பந்த செய்முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகை வழிகாட்டிகளின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம், கம்பனியானது மீளாய்வாண்டிற்கான பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் விரிவான பெறுகைத் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை.

(ஆ) தேசிய சான்றுறுதிப்படுத்தல் அதிகாரசபை செயற்திட்டத்தை ஸ்தாபித்தல், இணைய பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தடவியல் உட்கட்டமைப்பை முன்னேற்றுதல் செயற்திட்டத்தை என பெயரிடப்பட்ட இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு பட்டியலிடப்படுத்தப்பட்ட 09 பெறுகைகளில் இரண்டு பெறுகைகளானது 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தது.

(இ) இணைய பாதுகாப்பு இயலுமை மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் இணைய பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் தடவியல் உட்கட்டமைப்புச் செயற்திட்டம் எனப் பெயரிடப்பட்ட இரண்டு செயற்திட்டங்கள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு பட்டியலிடப்பட்ட 6 பெறுகைகளில் நான்கு பெறுகைகள் மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட றீட்ஹற் (Readhat renewing Licence) புதுப்பித்தல் உத்தரவாதத்தின் பெறுகையானது முன்னைய ஆண்டு பெறுகைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) சொத்துக்கள் முகாமைத்துவம் | ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தினை மதிப்பீடு, ஆவணப்படுத்தல், மற்றும் உரிமையாண்மை மாற்றுதல் மற்றும் பாதுகாத்தலுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) மனிதவள முகாமைத்துவம் | விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் மனிதவளங்கள் முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதி முகாமைத்துவம் | வினைத்திறனான நிதிசார் முகாமைத்துவ தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |